**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.207/2025 |
| Deposition of Witness for | : PW – 1 |
| Name and Age | : நாகம்மாள் (வயது 35) |
| Father / Husband Name | : க/பெ. சின்னசாமி |
| Occupation | : தலைமை காவலர் |
| Village | : மகேந்திரமங்கலம் காவல்நிலையம் |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 15.05.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused present.**

**PW– 1**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது மகேந்திரமங்கலம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிசெய்து வருகிறேன். கடந்த 11.10.2024–ம் தேதி 18.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சரசு அவர்கள் தலைமையில் நானும், தலைமைகாவலர் அருள்பிரசாத் என்பவரும் மதுவிலக்கு வழக்குகள் சம்மந்தமாக சீங்கேரி கிராமத்திற்கு அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது பின்னால் பெயர், விலாசம் விசாரித்து தெரிந்த தங்கமணி, வயது 30, த/பெ. கோபால் என்பவர் ஒரு பாலிதின் கவரை வைத்து மறைத்து வைத்துகொண்டிருந்தார் எங்களை பார்த்ததும் அந்த பையை மறைக்க முற்பட்டார் நாங்கள் அந்த பாலிதின் கவரை சோதனை செய்து பார்த்தபோது Diamond Brandy 180 ML – 4 பாட்டில்கள் Express Brandy 180 ML –17 பாட்டில்கள் மொத்தம் 21 பாட்டில்கள் வைத்திருந்தார். அரசு அனுமதியின்றி அரசு மதுபானங்களை சில்லறை விலையில் விற்பனை செய்வதற்காக மதுபானங்கள் வைத்திருப்பதாக கூறினார். அதனை காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். சம்பவ இடத்தில் சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும், தலைமை காவலர் அருள்பிரசாத் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.1–ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை காவல் ஆய்வாளரின் உத்தரவு படி காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்தார். பின் எதிரியை கைதுக்கான காரணம் கூறி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.15 17:11:52 +0530

கைது செய்து 19.00மணிக்கு நிலையம் அழைத்து வந்து காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது வழக்கு பதிவு செய்தார். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார். எதிரியை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். ஆஜர் எதிரி தான் அந்த நபர் ஆவார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

எதிரி மளிகை கடை வைத்துள்ளார். ரோந்திற்கு நானும், காவல்உதவி ஆய்வாளர் சரசும் ஒரு இருசக்கர வாகனத்திலும், அருள்பிரசாத் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றோம். மேற்படி விபத்தை போலிசார் விசாரணையில் கூறவில்லை. சம்பவ இடம் பொதுமக்கள்நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். கைப்பற்றிய மதுபானங்களை சம்பவ இடத்திலேயே உயரதிகாரியின் வாய்மொழி அழித்தோம். எழுத்து முலமான உத்தரவு படி தான் அழிக்கவேண்டும் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் தனிநபர் சாட்சிகள் முன்வராததால் தயார் செய்யவில்லை. சம்பவ இடத்தில் கைப்பற்றுதல் மகஜர் அச்சடித்து தயார் செய்தோம். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள கடையில் பிரிண்ட் எடுத்தோம் கடையின் பெயர் நினைவில்லை. காவல் உதவி ஆய்வாளர் தயார் செய்தார். எதிரியை கைது செய்தபோது சம்பவ இடத்தில் எதிரி உட்கார்ந்துககொண்டிருந்தார். வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நடந்திருந்தால் தனிநபர் சாட்சிகளை விசாரித்திருப்போம் என்றால் சரியல்ல. புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு புகார்தாரர் உயரதிகாரி என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல்நிலையத்தில் தயார் செய்தோம் என்றாலும், வழக்கிற்காக சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.15 17:11:58 +0530

Judicial Magistrate,
Palacode.

**(DEPOSITION OF WITNESS (Chapter XXIII code of CRPC)**
**Judicial Magistrate Court, Palacode.**

| | |
|---|---|
| Case Number | : CC.No.207/2025 |
| Deposition of Witness for | : PW – 2 |
| Name and Age | : அருள்பிரசாத் (வயது 42) |
| Father / Husband Name | : முருகன் |
| Occupation | : தலைமை காவலர் |
| Village | : மகேந்திரமங்கலம் காவல்நிலையம் |
| Taluk | : பாலக்கோடு |

**நாள்** – 15.05.2026

Solemnly affirmed and sworn in this Court, in accordance with provisions of Act of 1873.

**Accused present.**

**PW– 2**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

நான் தற்போது மகேந்திரமங்கலம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிசெய்து வருகிறேன். கடந்த 11.10.2024–ம் தேதி 18.00 மணிக்கு காவல் உதவி ஆய்வாளர் சரசு அவர்கள் தலைமையில் நானும், பெண் தலைமைகாவலர் நாகம்மாள் என்பவரும் மதுவிலக்கு வழக்குகள் சம்மந்தமாக சீங்கேரி கிராமத்திற்கு அருகே கண்காணித்துக்கொண்டு சென்றபோது பின்னால் பெயர், விலாசம் விசாரித்து தெரிந்த தங்கமணி, வயது 30, த/பெ. கோபால் என்பவர் ஒரு பாலிதின் கவரை வைத்து மறைத்து வைத்துக்கொண்டிருந்தார் எங்களை பார்த்ததும் அந்த பையை மறைக்க முற்பட்டார் நாங்கள் அந்த பாலிதின் கவரை சோதனை செய்து பார்த்தபோது Diamond Brandy 180 ML – 4 பாட்டில்கள் Express Brandy 180 ML –17 பாட்டில்கள் மொத்தம் 21 பாட்டில்கள் வைத்திருந்தார். அரசு அனுமதியின்றி அரசு மதுபானங்களை சில்லறை விலையில் விற்பனை செய்வதற்காக மதுபானங்கள் வைத்திருப்பதாக கூறினார். அதனை காவல் உதவி ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினார். சம்பவ இடத்தில் சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும், தலைமை காவலர் அருள்பிரசாத் என்பவரும் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.2– ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேற்படி கைப்பற்றப்பட்ட வழக்கு சொத்துக்களை காவல் ஆய்வாளரின் உத்தரவு படி காவல் உதவி ஆய்வாளர் சம்பவ இடத்திலேயே கொட்டி அழித்தார். பின் எதிரியை கைதுக்கான காரணம் கூறி

AJAY VIKRESH KUMAR G
Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.15 17:12:08 +0530

கைது செய்து 19.00மணிக்கு நிலையம் அழைத்து வந்து காவல் உதவி ஆய்வாளர் எதிரி மீது வழக்கு பதிவு செய்தார். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார். எதிரியை பார்த்தால் எனக்கு அடையாளம் தெரியும். ஆஜர் எதிரி தான் அந்த நபர் ஆவார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி என்ன தொழில் செய்கிறார் என்றால் வீட்டில் இருந்தார். ரோந்திற்கு பெண்தலைமைகாவலர் நாகம்மாள், காவல் உதவி ஆய்வாளர் சரசும் ஒரு இருசக்கர வாகனத்திலும், நான் ஒரு இருசக்கர வாகனத்தில் சென்றோம். மேற்படி விபத்தை போலிசார் விசாரணையில் கூறவில்லை. சம்பவ இடத்தில் 21 மதுபானங்களை கைப்பற்றி அங்கேயே அழித்தோம். மதுபானங்களை அழிக்க உயரதிகாரியிடம் எழுத்து மூலமான உத்தரவு பெறவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சம்பவ இடம் பொதுமக்கள்நடமாட்டம் அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் தனிநபர் சாட்சிகள் முன்வராததால் தயார் செய்யவில்லை. சம்பவ இடத்தில் பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை. எதிரியை கைது செய்தபோது எதிரி அவரது வீட்டில் மதுபானங்களுடன் உட்கார்ந்துககொண்டிருந்தார். கைப்பற்றுதல் மகஜரை சம்பவ இடத்தில் தயார் செய்தோம். அச்சடித்து ஜிட்டாண்ட அள்ளியில் உள்ள கடையில் பிரிண்ட் எடுத்து சம்பவ இடத்திற்கு கொண்டு வந்து கையொப்பம் செய்தோம். பிரிண்ட் எடுத்த கடையின் பெயர் நினைவில்லை. உண்மையில் சம்பவம் நடைபெற்றிருந்தால் தனிநபர் சாட்சிகளை விசாரித்திருப்போம் என்றால் சரியல்ல. புள்ளிவிபர கணக்கிற்காக எதிரி மீது பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கில் புலன்விசாரணை அதிகாரி எனது உயரதிகாரி என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி மதுபானங்களை விற்பனை செய்யவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me/before me in Open Court. Read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

AJAY VIKRESH KUMAR G

Digitally signed by AJAY VIKRESH KUMAR G
Date: 2026.05.15 17:12:17 +0530

Judicial Magistrate,
Palacode.